25.11.2024
அசல் வழக்கு எண்: 29/2022

வா.சா.3 சாட்சி வேல்முருகன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

அசல் வழக்கு பற்றிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியும் என்றால் சர்வே எண். 60/7 ஆகும். விஸ்தீரணம் 70 செண்டு ஆகும். பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் பெருமாள்நாயக்கருக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்திற்கு யார் பவர் பத்திரம் எழுதிகொடுத்தது என்றால் பூச்சம்மாள் என்பவர் செல்லம் என்பவருக்கு பவர் எழுதிகொடுத்துள்ளார். செல்லம் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். பவர் பத்திரம் எப்போது எழுதப்பட்டது என்றால் 2010 ம் ஆண்டு எழுதப்பட்டது. பவர் பத்திரத்தில் யார் யார் எல்லாம் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் பூச்சம்மாள் மற்றும் அவரது 2 மகன்கள் மற்றும் 3 மகள்கள் எழுதிகொடுத்துள்ளார்கள்.

மேற்படி பவர் ஏஜென்டு யாருக்கு கிரையம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்றால் 2013ம் ஆண்டு வாதி குமாரம்மாளுக்கு எழுதிகொடுத்துள்ளார்கள். குமாரம்மாள் என்பவர் எனது தாயார் என்றால் சரிதான். கிரைய பத்திரத்தின் தொகை எவ்வளவு என்றால் ரூ.22,950/- ஆகும். மேற்படி கிரைய ஆவணமான வா.சா.ஆ. 3 ஆவணத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. பெருமாள் நாயக்கரின் வாரிசுகளை காட்டகூடிய வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து பூச்சம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 1 ஆவணம்தான் பூச்சம்மாள் என்பவர் பெயரில் உள்ள தனிப்பட்டா என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் பட்டா எண். 67 என்று உள்ளது என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 4 ஆவணம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் பத்திரம் தயார் செய்யும் இடத்தில் வைத்து தயார் செய்து, பூச்சம்மாள் வீட்டில் வைத்து கை ரேகை பெறப்பட்டது. எந்த தேதியில் மேற்படி ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் கிரைய பத்திரம் பதிவு செய்த அன்றே தயார் செய்யப்பட்டது. எவ்வளவு தொகைக்கு ரொக்க ரசீது தயார் செய்யப்பட்டது என்றால் ரூ.22,950/–க்கு தயார் செய்யப்பட்டது. மேற்படி தொகையை என்னென்ன தாள்களில் கொடுக்கப்பட்டது என்றால் 500 ரூபாய் மற்றும் 1000 ரூபாய் தாள்களில் கொடுக்கப்பட்டது. யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் நானும், எனது மாமா ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம். ராஜேந்திரன் என்பவருடைய தகப்பனார் பெயர் என்ன என்றால் அழகர் நாயக்கர் ஆகும். மேற்படி ராஜேந்திரனுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 1 ஆண் மற்றும் 4 பெண் மக்கள் ஆகும். அவரது மகன் பெயர் என்ன என்றால் ஞாபகம் இல்லை. வா.சா.ஆ4 ரசீதில் ராஜேந்திரன் என்பவருடைய தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ. 2 ஆவணத்தில் பூச்சம்மாள் கைரேகை உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ. 4 ஆவணத்தில் கைரேகை சரியாக உள்ளது என்றால் உள்ளது. வா.சா.ஆ. 4 ஆவணத்தில் உள்ள கைரேகை சரியாக தெரியவில்லை என்றாலும் வா.சா.ஆ2 ஆவணத்தில் உள்ள கைரேகையும் வா.சா.ஆ. 4 ஆவணத்தில் உள்ள கைரேகையும் வித்தியாசமாக உள்ளது

என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 ரொக்க ரசீது இந்த வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ரசீது என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் பிரதிவாதி 2000ம் ஆண்டு கிரையம் வாங்கினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தாவா சொத்தை எனது தாயாருக்கு முன்பாகவே கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் மற்றும் தாயார் ஆகியோர்கள் மோசடியாக ஆவணங்களை உற்பத்தி செய்து கிரையம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது அம்மா பெயரில் தனிப்பட்டா உள்ளதா என்றால் தற்போது உள்ளது. தாவா வழக்கை தாக்கல் செய்த பிறகு பட்டா வாங்கினோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே எனது அம்மா பெயரில் பட்டா உள்ளது. தாவா சொத்தில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.